


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 17 | 4 Pages | 17.8.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 1 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 17 | 4 பக்கங்கள் | 17.8.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது**

**வேண்டாமை வேண்ட வரும்**

**விளக்கம்:**

**ஒருவன் ஒன்றை விரும்புவதனால் பிறவாநிலைமையைவிரும்பவேண்டும், அது அவா அற்றநிலையை விரும்பினால் உண்டாகும்.**

## அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்க விபரீத யோசனை... கலெக்டர் அலுவலகத்துக்கு பாம்புடன் வந்த விவசாயியால் பரபரப்பு

லக்னோ, ஆக. 17

உத்தரபிரதேசத்தின் மாவ் மாவட்டத்தின் கோட்வாலி பகுதியை சேர்ந்த விவசாயி ரோதஷியாம் மவுரியா (வயது 60). இவர் கலெக்டர் அலுவலகத்துக்கு ஒரு பாலித்தீன் பையுடன் வந்திருந்தார். அவரது நடவடிக்கையில் சந்தேகம் இருந்ததால், அங்கிருந்த போலீசார் அவரை பிடித்து விசாரித்தனர். மேலும் அந்த பாலித்தீன் பையையும் சோதனையிட்டனர். அப்போது அதில் ஒரு சிறிய நல்ல பாம்பு இருந்தது.

இதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த போலீசார், அது குறித்து மவுரியாவிடம் விசாரித்தனர். அப்போது, அந்த பாம்பை கலெக்டர் அலுவலகத்தில் விட்டுச்செல்ல வந்திருப்பதாக மவுரியா தெரிவித்தார்.

பின்னர் அதற்கான காரணத்தையும் போலீசாரிடம் கூறினார் அதாவது, அவரது மனைவி 2 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துள்ளார். இதனையடுத்து ரேஷன் கார்டில் இருந்து அவரது மனைவியின் பெயரை நீக்கும்போது மவுரியாவின் பெயரையும் அதிகாரிகள் நீக்கியுள்ளனர். இதற்காக மாவட்ட வட்ட வழங்கல் அலுவலகத்தில் பலமுறை மனு கொடுத்தும் இதுவரை பிரச்சினைக்கு தீர்வு காணவில்லை. இதன் காரணமாக அவர் 2 ஆண்டுகளாக மன உளைச்சலில் இருந்துள்ளார். எனவே அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் பாம்புடன் கலெக்டர் அலுவலகம் வந்ததாக கூறினார்.

பின்னர் அந்த பாம்பை பறிமுதல் செய்த போலீசார், விவசாயியின் கோரிக்கைக்குதீர்வுகாண்பதாகவும்உறுதியளித்தனர்.அதிகாரிகளின்கவனத்தை ஈர்க்க விவசாயியின் விபரீத யோசனையால் மாவ் கலெக்டர் அலுவலகத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## 'டிஜிட்டல் கைது' என மிரட்டல்: 83 வயது மூதாட்டியிடம் ரூ.7.70 கோடி மோசடி செய்த மர்ம கும்பல்

மும்பை, ஆக. 17

இணையதள பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில், அதன்மூலம் நடைபெறும் மோசடிகள் மற்றும் பணம் பறிப்பு சம்பவங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. அந்தவகையில் மும்பை சேர்ந்த முதாட்டி ஒருவரை 'டிஜிட்டல் கைது' செய்துள்ளதாக மிரட்டி ரூ.7.70 கோடியை மோசடி கும்பல் அபகரித்துள்ளது.

மும்பை கொலபா பகுதியில் பொதுத்துறை நிறுவனத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற 83 வயது மூதாட்டி ஒருவர் தனியாக வசித்து வருகிறார். மூதாட்டியின் 2 மகள்கள் திருமணம் முடிந்து வெளிநாட்டில் வசித்து வருகின்றனர். கடந்த மாதம் 4ந்தேதி தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணைய ஊழியர் என கூறிக்கொண்டு ஒருவர் மூதாட்டியை செல்போனில் தொடர்பு கொண்டு பேசினார்.

அவர் மூதாட்டியின் பெயரில் தொடங்கப்பட்ட வங்கி கணக்கில் இருந்து ஜெட்ஏர்வேஸ் நிறுவனர் நரேஷ் கோயலுக்கு சட்டவிரோத பணப்பரிவர்த்தனை நடந்துள்ளதாக கூறினார். மேலும் இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்த உள்ளனர் என கூறிவிட்டு இணைப்பை துண்டித்து விட்டார்.

இந்த நிலையில் மூதாட்டிக்கு மற்றொரு செல்போன் எண்ணில் இருந்து வாட்ஸ்அப்பில் வீடியோகால் வந்தது. அப்போது போலீஸ் சீருடை அணிந்து ஒருவர் மூதாட்டியிடம் பேசினார். அவர் சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் மூதாட்டியை டிஜிட்டல் கைது செய்து இருப்பதாக கூறினார். மேலும் ஆன்லைன் விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லையெனில் வீட்டுக்கு வந்து மூதாட்டி மட்டுமின்றி அவரது பிள்ளைகளையும் கைது செய்து விடுவோம் என மிரட்டினார்.

இதனால் மூதாட்டி அதிர்ச்சியில் உறைந்துபோனார். பயத்தில் அந்த கும்பல் சொன்ன அனைத்தையும் அவர் செய்தார். அவர்கள் முதலில் மூதாட்டியின் வங்கி இருப்பு, முதலீடுகள் உள்ளிட்ட விவரங்களை கேட்டு தெரிந்து கொண்டனர்.

இதையடுத்து போலீஸ் சீருடையில் பேசிய நபர் உள்ளிட்ட சிலர், பல்வேறு வங்கி கணக்குகளை கூறி அதற்கு பணம் அனுப்புமாறு மூதாட்டியை மிரட்டினர். பயத்தில் இருந்த மூதாட்டியும் அந்த வங்கி கணக்குகளுக்கு ரூ.7 கோடியே 70 லட்சம் வரை ஆன்லைன் மூலம் அனுப்பினார். மூதாட்டியிடம் முடிந்தவரை பணத்தை கறந்த கும்பல் பின்னர் அவரது தொடர்பை துண்டித்தனர்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன் மூதாட்டி நடந்த சம்பவம் குறித்து தனது மகளிடம் கூறினார். இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த மகள், மூதாட்டியிடம் போலீசில் புகார் கொடுக்குமாறு அறிவுறுத்தினார். இதையடுத்து மூதாட்டி நடந்த சம்பவம் குறித்து போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, மூதாட்டியிடம் பணம் பறித்த கும்பலை வலைவீசி தேடிவருகின்றனர்.

## பாகிஸ்தானுக்கு இந்தியா எச்சரிக்கை: தவறான கருத்துகளை பரப்பினால் விளைவுகளை சந்திக்க நேரிடும்



புதுடெல்லி, ஆக. 17

ஆபரேஷன் சிந்தூரை தொடர்ந்து இந்தியாவுக்கு எதிரான கருத்துகளை பாகிஸ்தான் தொடர்ந்து பரப்பி வருகிறது. குறிப்பாக அந்த நாட்டு ராணுவ தளபதி அசிம்முனீர், இந்தியா குறித்து அடாவடி பேச்சுக்களை பேசி வருகிறார்.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள இந்தியா, தவறான கருத்துகளை பரப்பினால் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று எச்சரித்துள்ளது. இதுதொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறுகையில்,

இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் தொடர்ந்து போர் வெறி மற்றும் வெறுப்பு கருத்துகள் பரப்பி வருவது எங்கள் கவனத்துக்கு வந்துள்ளது. தங்களது தோல்விகளை மறைக்க இதுபோன்ற நடவடிக்கைகளில் பாகிஸ்தான் மீண்டும், மீண்டும் ஈடுபட்டு வருகிறது. எந்த ஒரு தவறான செயலும், வேதனையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது சமீபத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதை பாகிஸ்தான் உணர வேண்டும் என்றார்.

# 'பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு' முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஆக. 18

இந்தியப் பொருட்களின் மீதான இறக்குமதி வரியினை அமெரிக்கா உயர்த்தியுள்ள நிலையில், தமிழ்நாட்டில் தொழில் துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு, வர்த்தகத்தை மீட்டெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி உள்ளார்.

இதுதொடர்பான அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில், இரு நாடுகளுக்கும் பயனளிக்கக் கூடிய வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவதற்கு மத்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டுவதாகவும், தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கான மத்திய அரசின் நிலைப்பாட்டை முழுமையாக ஆதரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ள முதல்அமைச்சர் அவர்கள், தற்போதைய 25 சதவீத வரி மற்றும் அதன் தொடர்ச்சியாக 50 சதவீத வரி அதிகரிப்பு காரணமாக கடுமையான தாக்கங்களை எதிர்கொள்வதால், தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் கவலை அளிக்கும் ஒரு பிரச்சனை குறித்து இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதாக தெரிவித்துள்ளார்.


கடந்த நிதியாண்டில், இந்தியாவின் மொத்த பொருட்கள் ஏற்றுமதியான $433.6 பில்லியன் மதிப்பிலான பொருட்களில் 20 விழுக்காடு அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் நிலையில், தமிழ்நாட்டின் $ 52.1 பில்லியன் பொருட்களில் 31 விழுக்காடு அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இவ்வாறு அமெரிக்க சந்தையை தமிழ்நாடு அதிகமாகச் சார்ந்திருப்பதால், இறக்குமதி வரியின் தாக்கம், இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கும் என்றும், இந்த வரிவிதிப்பு தமிழ்நாட்டின் உற்பத்தித் துறை மற்றும் வேலைவாய்ப்பில் குறிப்பிடத்தக்க பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரிவிதிப்பினால் ஜவுளி, ஆடைகள், இயந்திரங்கள், ஆட்டோமொபைல்ஸ், ரத்தினக் கற்கள் மற்றும் நகைகள், தோல், காலணிகள், கடல் பொருட்கள் மற்றும் ரசாயனங்கள் துறைகளில் மிகவும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இந்தத் துறைகள் அனைத்தும் அதிகத் தொழிலாளர்களை சார்ந்தவை என்பது இன்னும் கவலைக்குரியது என்றும், இதில் எந்தவொரு ஏற்றுமதி மந்தநிலையும் விரைவாக பெருமளவிலான பணி இழப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் தனது கடிதத்தில் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

20242025 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு 28 சதவீதம் பங்களித்தது என்றும், இது இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களைக் காட்டிலும் மிகவும் அதிகம் என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக, தமிழ்நாட்டில் ஜவுளித் துறை கிட்டத்தட்ட 75 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள முதல்அமைச்சர் அவர்கள், 25 சதவீதம் வரி மற்றும் முன்மொழியப்பட்டுள்ள 50 சதவீதம் வரியின் காரணமாக, 30 லட்சம் பேர் வேலை இழக்கும் அபாயம் உள்ளதாகவும், இந்த நெருக்கடியைத் தணிக்க, நமது ஏற்றுமதி போட்டித்தன்மைக்கு நீண்டகாலமாகத் தடையாக இருக்கும் கட்டமைப்பு சிக்கல்களைத் தீர்ப்பது அவசியம் என்று தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இது தொடர்பாக, பாதிக்கப்பட்ட துறைகளைச் சேர்ந்த தொழில் அமைப்புகளுடன் தான் விரிவான ஆலோசனைகளை நடத்தியதாகவும், இந்த ஆலோசனைகளின் அடிப்படையில், ஜவுளித் துறைக்கு இரண்டு அம்சங்களில், அதாவது, மனிதனால் உருவாக்கப்பட்ட இழை மதிப்புச் சங்கிலிக்கான ஜிஎஸ்டி விகிதங்களில் உள்ள



முரண்பாடுகளை நீக்கி, தலைகீழ் வரி கட்டமைப்பை சரிசெய்தல், முழு சங்கிலியையும் 5 சதவீதம் ஜிஎஸ்டி அடுக்குக்குள் கொண்டு வருதல் மற்றும் அனைத்து வகையான பருத்திக்கும் இறக்குமதி வரியில் இருந்து விலக்கு அளித்தல் ஆகியவற்றில் துரித நடவடிக்கை தேவைப்படுவதாக தனது கடிதத்தில் முதல்அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கூடுதலாக, அவசரக் கடன் வரி உத்தரவாதத் திட்டத்தின் கீழ் (ECLGS) 30 சதவீதம் பிணையமில்லாத கடன்களை 5 சதவீதம் வட்டி மானியம் மற்றும் அசலைத் திருப்பிச் செலுத்துதலில் இரண்டு ஆண்டு தற்காலிக தடையுடன் நீட்டித்தல், RoDTEP நன்மைகளை 5 சதவீதம் ஆக உயர்த்துதல், நூல் உட்பட அனைத்து ஜவுளி ஏற்றுமதிகளுக்கும் முன் மற்றும் பின் கடனை நீட்டித்தல் ஆகியவை நமது ஏற்றுமதி போட்டித்தன்மையை வலுப்படுத்துவதற்கான பிற முக்கியமான காரணிகள முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய வர்த்தகத்தில் சுங்கவரி தாக்கங்கள் மற்றும் போட்டி அழுத்தங்கள் காரணமாக மற்ற துறைகளும் இதேபோன்ற சவால்களை எதிர்கொள்கின்றன என்று குறிப்பிட்டுள்ள முதல்அமைச்சர் அவர்கள், அதற்கு உடனடி நிவாரணம் வழங்கி, பணப்புழக்கத்தை மேம்படுத்தவும், செலவுச் சுமைகளைக் குறைக்கவும் சுங்கவரிகளால் பாதிக்கப்பட்ட அனைத்து ஏற்றுமதியாளர்களுக்கும் சிறப்பு வட்டி மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதையும், அதிக சுங்கவரி சந்தை அபாயங்களை ஈடுகட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் (FTAக்கள்) மற்றும் இருதரப்பு ஒப்பந்தங்களை விரைவுபடுத்துவதையும் மத்திய அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரச்சினையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் செயல்படுத்தப்பட்டதைப் போன்று, அசலைத் திருப்பிச் செலுத்துவதில் சலுகை உள்ளிட்ட ஒரு சிறப்பு நிதி நிவாரணத் தொகுப்பு நமது ஏற்றுமதியாளர்களை ஆதரிக்க வேண்டியது அவசியம் என்றும், பிரேசில் அரசு அந்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு வரி ஒத்திவைப்பு மற்றும் வரிச் சலுகைகளை அறிவித்துள்ளதைப் போன்று, இந்தியாவிலும் இதுபோன்ற ஒரு முயற்சியை தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் முதல்அமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் வலுவான உற்பத்தித் துறை, இதுவரை கண்டிராத ஒரு நெருக்கடியை தற்போது எதிர்கொள்வதாகவும், பல்வேறு துறைகளில் லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்கள் இந்த விஷயத்தில் அவசரமாகத் தலையிட்டு, சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் தொழில்துறையைச்சார்ந்தவர்களுடன் கலந்தாலோசித்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அதோடு, இந்த இக்கட்டான சூழ்நிலையை சமாளிக்கவும், வர்த்தகத்தை மீட்டெடுக்கவும் மத்திய அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழ்நாடு முழு ஒத்துழைப்பினை வழங்கும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தியதற்காக திருநெல்வேலி மாவட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வு துறையின் பரிசு வழங்கல் தூய யோவான் கல்லூரிக்கு வழங்கப்பட்டது

போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தியதற்காக திருநெல்வேலி மாவட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வு துறையின் பரிசு வழங்கல் தூய யோவான் கல்லூரிக்கு வழங்கப்பட்டது திருநெல்வேலி மாவட்டத்தில் போதைப்பொருள் மற்றும்சட்டவிரோதகடத்தல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு11/08/2025 அன்று போதைப்பொருள் ஒழிப்பதை நோக்கமாக கொள்ளாமல் பொதுமக்களிடம் போதை பொருள் ஒழிப்பு பற்றிய சிறப்பான முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தியமைக்காக தூய யோவான் கல்லூரிக்கு நாட்டு நல பணி திட்டதன்னார்வலர்களுக்கு திருநெல்வேலி மாவட்ட அளவில் மூன்றாம் பரிசான ரூபாய் ஐந்தாயிரம் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் பாராட்டு சான்றிதழ் ஆகியவற்றை நேருஜி கலையரங்கம் பாளையங்கோட்டை நடத்திய பரிசளிப்பு விழாவில் முனைவர் பெலிக்ஸ் பிரான்சி நாட்டு நல பணித்திட்ட அலுவலர் அவர்கள்




தமிழ்நாடு சட்டமன்ற பேரவை தலைவர் மாண்புமிகு திரு அப்பாவு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மாண்புமிகு திரு சுகுமார் இ ஆ ப பாளை சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்துல் வஹாப் நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி மனோகரன் திருநெல்வேலி காவல்துறை கண்காணிப்பாளர் சிலம்பரசன் மற்றும் மாண்புமிகு முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜிலா சத்யா ஆனந்த் ஆகியோர் பாராட்டி வழங்கினார்கள்

## திண்டுக்கல்லில் 3 இடங்களில் அமலாக்கத்துறையினர் திடீர் சோதனை

திண்டுக்கல் கோவிந்தாபுரம் துரைராஜ் நகரில் உள்ள ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வீடு திண்டுக்கல் கோவிந்தாபுரம், அசோக்நகர், வள்ளலார் நகரில் உள்ள அமைச்சர் ஐ.பெரியசாமி மகள் இந்திராணி வீடு சீலப்பாடியில் உள்ள ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி மகனும், பழனி சட்டமன்ற உறுப்பினரும்

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளருமான ஐ.பி.செந்தில்குமார் வீடு ஆகிய 3 இடங்களில் அமலாக்கதுறையினர் சோதனையில் ஈடுபட்டு ள்ளனர். துப்பாக்கி ஏந்திய மத்திய CRPF போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுப ட்டுள்ளனர்



பள்ளிகாலம்தொட்டேதி.மு.கவில்இணைந்து செயல்பட்டு வந்தவர் ஐ.பெரியசாமி.

திண்டுக்கல் இடைத்தேர்தலுக்கு பிறகு அடையாளம் காணப்பட்ட ஐ.பெரியசாமி முதன் முதலில் வத்தலகுண்டு ஒன்றியத் தலைவரானார்.

1989தேர்தலில் முதன் முறையாக ஆத்தூரில் போட்டியிட்டு எம்.எல்.ஏவாக தேர்வானார்.

எம்.எல்.ஏ ஆன பிறகு நடைபெற்ற தி.மு.க மாவட்டச் செயலாளர் தேர்தலில் மாயத்தேவர் முத்துசாமியை வீழ்த்தி வெற்றி பெற்றார்.

1996ம் ஆண்டு தேர்தலில் வென்று முதன் முறையாக அமைச்சராக பதவி ஏற்றார்.

அழகிரியுடன் நெருக்கம் காட்டி வந்தாலும், 2009 மக்களவை தேர்தலுக்கு பிறகு முழுக்க முழுக்க மு.க.ஸ்டாலின் ஆதரவாளராக மாறினார். 2021ம் ஆண்டு தேர்தலில் வென்று முதலில் கூட்டுறவுத்துறை அமைச்சராகவும் தற்போது ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராகவும் உள்ளார்.

20062011 அமைச்சராக இருந்த ஐ.பெரியசாமி மீது வீட்டுவசதி வாரியத்தில் வீடு ஒதுக்கியதில் முறைகேடு நடைபெற்றதாக வழக்கு உள்ளது.

வீட்டு வசதி வாரிய வீடு ஒதுக்கீட்டில் சட்டவிரோத பணப்பரிமாற்றம் என அமலாக்கத்துறை பதிவு செய்துள்ள வழக்கில் தற்போது ரெய்டு நடைபெறுகிறது.

அமலாக்க துறைக்கு ஷாக் கொடுத்த தமிழக போலீஸ் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் தங்கி உள்ள அமைச்சர் ஐ..பெரியசாமியின் மகன் ஐ.பி.செந்தில்குமார் MLA அறையில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்த சென்றனர். அப்போது, எம்எல்ஏ விடுதியில் உள்ள அறையின் கதவு பூட்டப்பட்டிருந்தது. இதனால், அமலாக்கத்துறை அதிகாரிகள் வெகு நேரம் காத்திருந்தனர். பின்னர், அமலாக்கத்துறை அதிகாரிகள் விடுதியின் பூட்டை உடைத்து உள்ளே செல்ல முடிவு செய்தனர். அப்போது, சட்டமன்ற செயலாளர் சீனிவாசன் சாவி அளித்ததை அடுத்து, அமலாக்கத் துறை அதிகாரிகள் உள்ளே சென்று சோதனை மேற்கொண்டனர்

சட்டமன்ற செயலாளர் சீனிவாசன் எம்எல்ஏ விடுதிக்குள் அமலாக்கத் துறை அதிகாரிகள் அத்துமீறி நுழைந்ததாக கூறி புகார் அளித்தார். அதன்பேரில், போலீசார் 4 அமலாக்கத் துறை அதிகாரிகள் மற்றும் இரு சிஆர்பிஎஃப் வீரர்கள் மீது வழக்குபதிவுசெய்து விசாரித்து வருகின்றனர்.

அதிரடி சோதனையில் ஈடுபட்டு வந்த அமலாக்கத் துறை அதிகாரிகள் மீது தமிழக போலீசார் வழக்குப் பதிந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது .



# ஒட்டன்சத்திரம் அருகே வாய் பேச முடியாத சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்த வாலிபர் போலீசார் நடவடிக்கைக்கு பயந்து விஷம் குடித்து தற்கொலை முயற்சி மருத்துவமனையில் அனுமதி

ஒட்டன்சத்திரம் அருகே வாய் பேச முடியாத சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்த வாலிபர் போலீசார் நடவடிக்கைக்கு பயந்து விஷம் குடித்து தற்கொலை முயற்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

திண்டுக்கல் ஒட்டன்சத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த வாய் பேச முடியாத 17 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்த அம்பிளிக்கையை அடுத்த சின்னமண்டவாடியை சேர்ந்த ஆறுமுகம் மகன் கவிராஜன்(32) மீது சிறுமியின் பெற்றோர்கள் ஒட்டன்சத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். இது குறித்து ஒட்டன்சத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் பேபி தலைமையிலான போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்தனர்.

இந்நிலையில் கவிராஜன் போலீசார் தன்னை விசாரணைக்கு அழைப்பார்கள் என்று பயந்து விஷம் குடித்து தற்கொலைக்கு முயற்சி செய்து ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று மதுரை அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# திட்டக்குடியில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சுதந்திர தின விழா கொண்டாட்டம்



திட்டக்குடி, ஆக. 17

கடலூர் மாவட்டம் திட்டக்குடியில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 79 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்ஸ்பெக்டர் கலைச்செல்வி தலைமையில் தேசியக்கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கினார்கள்.

இதில் நிலைய காவலர்கள் மற்றும் பெரம்பலூர் மாவட்டம் அகரம்சீகூர் பிரமுகர் தனபால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# காகித உற்பத்திக்கு உதவும் மரங்களை வளர்க்க தரிசு நிலங்களை குத்தகைக்கு வழங்க எஸ்பிபி நிறுவன தலைவர் கோரிக்கை

ஈரோடு ஆக. 17

இந்தோனேசிய அரசாங்கம் ஏராளமான தரிசு நிலங்களை காகித உற்பத்திக்கு உதவும் மரங்களை வளர்க்க அந்நாட்டு விவசாயிகளுக்கு அளிக்கிறது. அதே போன்று இந்திய அரசும் தரிசு நிலங்களை நீண்ட கால குத்தகைக்கு காகித நிறுவனங்களுக்கு மரங்களை வளர்க்க கொடுத்து உதவ வேண்டும். இதனால் இந்தோனேசியா போல நாமும் காகித உற்பத்தி செலவை பாதியாக குறைக்கலாம். இதனால் ஏற்றுமதி அதிகரிக்கும். நமது தொழில் வளர்ச்சி அடையும், என்று சேஷசாயி பேப்பர் மற்றும் போர்ட் நிறுவனத் தலைவர் கோபாலரத்தினம் கூறினார்.




இந்திய காகித தினம் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 1ஆம் தேதி கொண்டாட்டப் படுகிறது. அதன்படி சேஷசாயி பேப்பர் மற்றும் போர்ட் அத்தினத்தை ஒட்டி பல்வேறு போட்டிகளை மாணவ மாணவிகளுக்கு நடத்தி பரிசுகள் வழங்கியது. அப்போது அந நிறுவன தலைவர் கோபாலகரத்தினம் கூறியதாவது: மகாத்மா காந்தி கையால் தயாரிக்கும் காகித நிறுவனத்தை நிறுவ இந்திய விஞ்ஞானிகள் வலியுறுத்தினார். அதன்படி முன்னாள் பாரத பிரதமர் ஜவஹர்லால் நேரு இந்தியாவில் கையால் செய்யப்பட்ட காகிதத்தை ஆகஸ்ட் 1 1940 பூனேயில் துவக்கி வைத்தார். அதில் இந்திய அரசியலமைப்பின் சில பிரதிகள் அச்சிடப்பட்டன. அதன் உற்பத்தி செயல்முறை மற்றும் அதன் நிலையான முக்கிய உள்ளீட்டுப் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 1ம் தேதி காகித தினமாக தினமாக இந்தியாவில் கொண்டாடப்படுகிறது. உலகின் காகித உற்பத்தியில் இந்தியாவின் பங்கு 5% ஆகும். காகித தொழில் மூலம் நேரடியாக அஞ்சு லட்சம் மறைமுகமாக 15 லட்சம் பேர் வேலை பெறுகின்றனர். இந்தியாவில் தனிநபர் காகித நுகர்வு 15 கிலோ. அதே நேரத்தில் உலகளவில் தனிநபர் சராசரி காகித நுகர்வு 57 கிலோ. அச்சிடும் மற்றும் செய்தித்தாள், பேக்கிங் பேப்பர், டிஷ்யூ பேப்பர் என நான்கு முக்கிய வகைகள் உள்ளன. காகிதம் விவசாயிகளிடமிருந்து மரம் கரும்புச்சக்கை வைக்கோல் பயன்படுத்தப்பட்டகாகித கழிவு ஆகியவற்றில் இருந்து தயாரிக்கப்படுகிறது. சுமார் 71% கழிவு காகிதம் 21 சதம் மரத்திலிருந்து பண்ணைக்காடுகள் மற்றும் 8% விவசாய கழிவில் இருந்து தயாரிக்கப்படுகிறது. காடுகளை அழிப்பதன் மூலம் காகிதம் தயாரிக்கப்படுகிறது என்ற தவறான செய்தி உள்ளது. விவசாயிகளிடம் இருந்து கரும்பு சக்கை வைக்கோல் மரம் பெறப்படுகின்றன. இந்தியாவில் சுமார் ஐந்து லட்சம் விவசாயிகள் மரம் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். அவர்களிடமிருந்து காகிதம் தயாரிக்கும் மூலப் பொருட்கள் பெறப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 20,000 ஏக்கர் வேளாண் மற்றும் பண்ணை வனத்துறையின் கீழ் பசுமைப்படுத்தப்படுகிறது. எஸ்பிபி நிறுவனம் தரமான மரக்கன்றுகளை உற்பத்தி செய்து ஒவ்வொரு ஆண்டும் எ 15 கோடி மரங்களை வளர்க்க விவசாயிகளுக்கு உதவுகிறது. காகித உற்பத்திக்கு தேவையான 50 சதத்துக்கும் அதிகமான ஆற்றல் காகித உற்பத்தி செயல்முறைகளிலேயே உருவாக்கப்படும் பயோமாஸ் களிடமிருந்து இருந்து பெறப்படுகிறது. இங்கிலாந்தில் சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் 81% அதிகமான மக்கள் மின்னணு ஊடகம் மொபைல் ஆகியவற்றை விட காகிதத்தில் உள்ள புத்தகங்களை படிக்க விரும்புகின்றனர் இது கண்களுக்கும் பாதுகாப்பானது அரசாங்கம் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் ஒழிக்க ஆர்வமாக உள்ளது எனவே காகித பைகள் மற்றும் உணவு தரத்தட்டுகள் உபயோகத்தை அதிகப்படுத்த வேண்டும்.. என்று தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் செயல் இயக்குனர் கோபாலகிருஷ்ண பாண்டி, ஃபீல்ட் ஆபிசர் சீனிவாசா, பொது மேலாளர் அழகர்சாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இராமநாதபுரம் மாவட்டம் 79வது சுதந்திர தினத்தையொட்டி நடைபெற்ற கிராம சபைக் கூட்டம்: கலெக்டர் வேண்டுகோள்



இராமநாதபுரம், ஆக. 17

இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றியம், அ.புத்தூர் ஊராட்சியில் 79 வது சுதந்திர தினத்தையொட்டி நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் முன்னிலையில், மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் பங்கேற்று, ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து பொது மக்களிடம் கேட்டறிந்து தெரிவிக்கையில்,

கிராம சபைக் கூட்டத்தின் நோக்கம் ஊராட்சியின் வளர்ச்சிக்கு தேவையான திட்டங்களை பொது மக்கள் ஒன்று கூடி கலந்து ஆலோசித்து தீர்மானங்களை நிறைவேற்றுவதாகும். அந்த வகையில் இன்று நடைபெறும் கிராம சபைக்கூட்டம் போல் ஒவ்வொரு கிராம சபை கூட்டத்திலும் ஊர் பொதுமக்கள் முழுளவில் கலந்து கொண்டு மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் தேவையான பணிகளை தேர்வு செய்து தீர்மானத்தின் மூலம் நிறைவேற்றி திட்டங்களை செயல்படுத்திட வேண்டும். கிராம சபையில் முன்மொழியும் ஒவ்வொரு திட்டமும் வலுசேர்க்கக்கூடிய ஒன்றாகும். அது மட்டுமின்றி தனிநபர் பொருளாதார முன்னேற்றத்திற்கும் கிராம சபைக்கூட்டம் பயனுள்ளதாக அமையும். எனவே அனைவரும் இதுபோன்ற கிராம சபை கூட்டங்களில் பங்கேற்று பயன்பெற வேண்டும்.

மேலும் இன்று பொதுமக்களின் முக்கிய கோரிக்கையாக தெரிவித்த கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேபோல் பேவர் சாலை அமைக்க கேட்டுக் கொண்டதற்கிணங்க, தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பகுதியில் தடையின்றி மின்சாரம் கிடைத்திட கூடுதல் மின்மாற்றி அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பாசன கண்மாயின் உள்பகுதியில் உயர் அழுத்த மின்சார வயர் தாழ்வாக செல்வதை தெரிவித்ததையொட்டி, ஒருவார காலத்திற்குள் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இப்பகுதியில் தடையின்றி முழுமையாக குடிநீர் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. அதுவும் விரைவில் சரி செய்யப்படும்.

பொதுமக்கள் அரசின் திட்டங்களை தெரிந்து பயன்பெறும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம், கலைஞரின் கனவு இல்லம், முதலமைச்சரின் விரிவான சாலை திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்துவதுடன் அரசு பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு படித்து உயர்கல்வி செல்ல உள்ளவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படுகிறது. அது மட்டுமின்றி மாணவர்கள் உயர்கல்வி பெறவும் வேலைவாய்ப்பு பெறவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசின் திட்டங்களை பெற்று பயன் பெற்றிட வேண்டும் என மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்தார்.

தொடர்ந்து வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறையின் மூலம் பயனாளிகளுக்கு மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்

# மேலூர் தாலுகா கச்சிராயன்பட்டி சேகரம், க. கல்லம்பட்டியில் அமைந்திருக்கும் ஸ்ரீ மாயக்கண்ணன் திருக்கோவிலின்கிருஷ்ண ஜெயந்தி விழா



மேலூர் ஆக.17

மேலூர் தாலுகா கச்சிராயன்பட்டி சேகரம், க. கல்லம்பட்டியில் அமைந்திருக்கும் ஸ்ரீ மாயக்கண்ணன் திருக்கோவிலின் யாதவ குல மக்களால் நடத்தும் 18ம் ஆண்டு ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. பக்தர்கள் காப்பு கட்டி மாலை அணிந்து 15 நாட்கள் விரதம் இருந்து வந்தனர்.

கிருஷ்ண கோவில் முன்பு விளக்கு பூஜை நடைபெற்றது.

கிருஷ்ண கோவில் இருந்து 100க்கும் மேற்பட்ட பக்தர்கள் பால்குடம் எடுத்து ஊர்வலமாக சென்று பின்பு கோவில் வந்தடைந்தனர். கிருஷ்ணனுக்கு பாலாபிஷேகம், அலங்கார தீபாராதனை, உரியடித்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. பொதுமக்கள் சாமி தரிசனம் செய்து வழிபட்டனர். கோவில் அருகே சிறப்பு அன்னதானம் நடைபெற்றது. அன்னதானத்தில் 1000க்கும் மேற்பட்ட பக்தர்கள், பொதுமக்களுக்கு அறுசுவை உணவு பரிமாறப்பட்டது. சிறுவர்களுக்கு விளையாட்டு போட்டு நடைபெற்றது. நிகழ்ச்சி ஏற்பாட்டினை க. கல்லம்பட்டி யாதவ குல மக்கள் மற்றும் இளைஞர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் தமிழறிஞர்களின் திருவுருவப் படங்களுக்கு கலெக்டர் மரியாதை



பெரம்பலூர், ஆக. 17

பெரம்பலூர் மாவட்டத்தில் 79வது சுதந்திரத் திருநாளை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் தமிழறிஞர்களின் திருவுருவப் படங்களுக்கு கலெக்டர் மரியாதை செலுத்தினார்.

இந்தியத்திருநாட்டின் 79வது சுதந்திரத் திருநாளை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டிருக்கும் பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சுதந்திரப்போராட்ட தியாகிகள் மற்றும் தமிழறிஞர்களின் திருவுருவப்படங்களுக்கு மாவட்ட கலெக்டர் ச.அருண்ராஜ், மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தின் தரைதளத்தில், நம் இந்தியத்திருநாட்டின் விடுதலைக்குப் போராடிய பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த நினைவில் வாழும் சுதந்திரப்போராட்ட தியாகிகள் மற்றும் தமிழறிஞர்களின் திருவுருவப்படங்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டுள்ளது, ஆண்டுதோறும் சுதந்திரத்திருநாள் மற்றும் குடியரசுநாள் விழாக்களின்போது, மாவட்ட கலெக்டர் தியாகிகளின் திருவுருவப் படங்களுக்கு மலர்தூவி மரியாதை செலுத்துவார்கள்.

அதன்படி, 79வது சுதந்திர திருநாளை முன்னிட்டு வண்ண மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படங்களுக்கு மாவட்ட கலெக்டர் ச.அருண்ராஜ் மலர்தூவி மரியாதை செலுத்தினார். அவரைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ச.வைத்தியநாதன், வருவாய் கோட்டாட்சியர் (பொ) சக்திவேல், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் க.பாவேந்தன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் சிவக்குமார் உள்ளிட்ட அலுவலர்களும் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

சுதந்திரத்திருநாள் கொண்டாட்டங்களுக்காக வருகை தந்திருந்த பொதுமக்கள், மாணவ மாணவிகள் என ஏராளமானோர் தியாகிகளின் திருவுருவப்படங்களைப் பார்வையிட்டு, அவர்களின் படங்களுக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

# கன்னியாகுமரி திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் கலைஞரின் கனவு இல்லம் திட்ட பணிகள்: கலெக்டர் ஆய்வு





கன்னியாகுமரி, ஆக. 17

கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் கலைஞரின் கனவு இல்லம் திட்டப்பணிகளை மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா, நேரில் ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் தேவைகளுக்காக பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அதனடிப்படையில் ஊரகப்பகுதியில் வசிக்கும் வீடு இல்லாத ஏழை, எளிய மக்கள் பாதுகாப்புடன் வசிக்க வேண்டும் எனவும், அனைவருக்குமே பாதுகாப்பான நிரந்தர கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்காக கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தை அறிவித்து, இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ரூ.3.10 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட ஆலம்பாரி மலைவாழ் பகுதியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தற்போது பூச்சு வேலைகள் நடைபெற்று வருகிறது. கட்டப்பட்டு வரும் வீட்டின் அடிப்படை வசதிகள், கட்டுமான பணிகளின் தரம் உள்ளிட்டவைகள் ஆய்வு மேற்கொண்டதோடு, கட்டுமான பணிகள் தொய்வின்றி நடைபெற பயனாளிக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் பணிகளை தரமானதாகவும், உறுதித்தன்மையுடன் அமைத்திடுவதை துறை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# நாரவாரிகுப்பம் பேரூராட்சியில் நடைபெற்று வரும் திட்டப் பணிகளை பேரூராட்சிகளின் இயக்குநர் திடீர் ஆய்வு



மாதவரம் தொகுதி நாரவாரிகுப்பம் பேரூராட்சியில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள் குறித்து தமிழ்நாடு அரசு பேரூராட்சிகளின் இயக்குநர் பிரதீப்குமார் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது தமிழ்நாடு முதலமைச்சர் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள பணிகளில் நிலுவையில் உள்ள பணிகளை உடனுக்குடன் முடித்து பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தினார்.

இதனை தொடர்ந்து, ஜி.என்.டி.சாலையில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் 20232024 ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடுபணிகள் நடைபெறுவதை பார்வையிட்டு பணிகள் விரைந்து முடிக்கவேண்டும் என்று அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

மேலும் 2024-2025 ஆம் ஆண்டு 15வது நிதி குழு ஆணையத்தின் சுகாதார மான்யத் திட்டத்தில் அறிஞர் அண்ணா பார்க் தெருவில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சுகாதார நிலையம் கட்டிடத்தை பார்வையிட்டார்.

அதேபோல் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்பாட்டில் வார்டு எண்.2ல் அமைந்துள்ள சோத்துப்பாக்கம் சாலை சர்வே எண்.90/2ல் வளமீட்பு பூங்காவினை ஆய்வு மேற்கொண்டு குப்பைகளிலிருந்து உரம் தயாரித்தல் மற்றும் குப்பைகளை கையாளுதல் பணிகளை சீரிய முறையில் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதுடன் வளமீட்பு பூங்காவினை மேலும் சிறப்பாக பராமரிக்கவும் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வின்போது பேரூராட்சிகளின் இணை இயக்குநர் (திட்டம்) காளியப்பன், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஜெயகுமார், உதவி செயற் பொறியாளர் சரவணன், செயல் அலுவலர் அ.அபுபக்கர், பேரூராட்சி மன்றத் தலைவர் தமிழரசி குமார், துணைத்தலைவர் விப்ரநாராயணன், இளநிலை பொறியாளர் முத்து மற்றும் அலுவலகப் பணியாளர்கள் உடனிருந்தனர்.

# தஞ்சை மாநகராட்சியில் சுதந்திர தினவிழா மேயர் சண்.இராமநாதன் தேசியக்கொடி ஏற்றினார்



தஞ்சாவூர், ஆக.17

தஞ்சை மாநகராட்சி அலுவலகத்தில் 79 வது சுதந்திர தினவிழா நடைபெற்றது. விழாவிற்கு ஆணையர் கண்ணன், துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநகர் நல அலுவலர் நமச்சிவாயம் வரவேற்றார். மேயர் சண்.ராமநாதன் தலைமை தாங்கி தேசியக்கொடி ஏற்றி வைத்து மரியாதை செய்தார். முன்னதாக மகாத்மா காந்தி சிலைக்கு மேயர் மாலை அணிவித்தார்.

பின்னர் அவர் மாநகராட்சியில் சிறப்பாக பணிபுரிந்த அலுவலர்களுக்கு விருது வழங்கி பாராட்டினார். தொடர்ந்து சிறப்பாக பணிபுரிந்த தூய்மை பணியாளர்களுக்கு பரிசு வழங்கி கவுரவித்தார். விழாவில் மாநகராட்சி பொறியாளர் மோகன் மண்டலக்குழு தலைவர்கள் மேத்தா, ரம்யா சரவணன், கலையரசன் மாநகராட்சி உறுப்பினர்கள் லெனின், ஸ்டெல்லா நேசமணி ராஜ் சசிகலா அமர்நாத் கெஜலெட்சுமி, மரகதம் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், ஊழியர்கள், தூய்மை பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் உதவி செயற் பொறியாளர் மனோகரன் நன்றி கூறினார்.

# தாராபுரம் அருள்மிகு காடு அனுமந்தராய சுவாமி திருக்கோவிலில் சமபந்தி விருந்து

தாராபுரம், ஆக. 17

தாராபுரம் அருள்மிகு காடு அனுமந்தராய சுவாமி திருக்கோவிலில் சமபந்தி விருந்து நடைபெற்றது.

நம் இந்திய நாட்டின் 79வது சுதந்திர தினத்தை முன்னிட்டு திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் உள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு காடு அனுமந்தராயசாமி கோவிலில் இந்து அறநிலையத் துறையின் சார்பில் சிறப்பு பிரார்த்தனையும் சமபந்தி விருந்தும் சிறப்பாக நடைபெற்றது. தாராபுரம் நகர மன்ற தலைவர் துவக்கி வைத்த இந்த நிகழ்வில் தாராபுரம் வட்டாட்சியர் ராமலிங்கம், திமுக நகரச் செயலாளர் முருகானந்தம், கவுன்சிலர் தனலட்சுமி ஐயப்பன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் பொதுமக்களும் பள்ளி மாணவிகளும் பங்கேற்று மன நிறைவுடன் உணவருந்தி சென்றனர். இதற்கான ஏற்பாட்டை கோயில் செயல் அலுவலர் மல்லிகா அறங்காவலர்கள் குரு ராஜன், பிந்துமாதவன், குருபிரசாத் மற்றும் கோயில் பணியாளர் குருராஜன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் 28-வது பட்டமளிப்பு விழா




ஈரோடு, ஆக. 17

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் 28 வது பட்டமளிப்பு விழாவில் 1258 மாணவர்கள் பட்டம் பெற்றனர். கிராமப்புற மாணவர்வர்களுக்கு கல்விச்சேவையாற்றி வரும் கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் கோயம்புத்தூர், தேர்வாணையர் முனைவர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் கே.விஜயராணி அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் தரவரிசையில் சிறப்பிடம் பெற்ற 72 மாணவர்களுக்கு பதக்கத்துடன் பட்டமும் 1186 மாணவர்களுக்குப் பட்டமும் என மொத்தம் 1258 மாணவர்களுக்கு பட்டம் வழங்கிச் சிறப்பித்தார். அவர், சிறப்புரையில் தோல்வி முடிவல்ல, வெற்றிக்கு எல்லை என்பதே இல்லை, மாணவர்கள் கற்கும் கல்வி வாழ்க்கைக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் அமைத்துக்கொள்ள வேண்டும் என்றும் பெண்கள் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கல்வி கற்று உயரவேண்டும் என்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் சொல்கேட்டு நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியதோடு உயர்கல்வி வாய்ப்புகளை பயன்படுத்தி உயர்ந்த எண்ணங்களோடு வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் வாழ்த்திப் பேசினார்.

மேலும் இவ்விழாவில் கொங்குவேளாளர் தொழில்நுட்பக் கல்லூரி அறக்கட்டளையின் தலைவர் மருத்துவர் ஆர்.குமாரசுவாமி, செயலாளர் பி.சத்தியமூர்த்தி, பொருளாளர் கே.வி.ரவிசங்கர், துணைத்தலைவர் ஈ.ஆர்.கே.கிருஷ்ணன், கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தாளாளர் பி.டி.தங்கவேல், கொங்கு நேஷனல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் தாளாளர் ஆர்.எம்.தேவ ராஜா, கொங்கு வேளாளர் தொழில்நுட்பக் கல்லூரி அறக்கட்டளையின் பாரம்பரியப் பாதுகாவலர் பி.சச்சிதானந்தன், கல்லூரியின் முதல்வர் முனைவர் ஹெச்.வாசுதேவன், துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் என அனைவரும் பட்டம் பெற்ற மாணவர்களை வாழ்த்தினர்.

# சுதந்திர தின விழாவினை முன்னிட்டு செங்கல்பட்டு மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி சந் திரசேகரன் தேசிய கொடியினை ஏற்றி இனிப்பு வழங்கினார்




செங்கல்பட்டு, ஆக. 17

79 ஆவது சுதந்திர தின விழா செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் செங்கல்பட்டு மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி சந்திரசேகரன் தேசியக்கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் 79வது சுதந்திர தின விழாநிகழ்வில் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி சந்திரசேகரன் தேசிய கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கினர்

அதனைத் தொடர்ந்து செங்கல்பட்டு வழக்கறிஞர் சங்க சார்பாக 79 வது சுதந்திர தின விழா கடந்த ஒரு மாத காலமாக வழக்கறிஞர்கள் மற்றும் வழக் கறிஞர்உதவியாளர்களுக்கு கிரிக்கெட் .கேரம்,செஸ் ,வாலிபால்,பேட்மிட்டன் போன்ற போட்டிகள் நடைபெற்றது

இந்த போட்டியில்யில் வெற்றி பெற்ற வழக்கறிஞர்கள் மற்றும்வழக்கறிஞர் உதவியாளர்களுக்கு செங்கல்பட்டு மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி சந்திரசேகரன் மற்றும் கூடுதல்மாவட்ட நீதிபதி சரவணகுமார் கடந்த ஒரு மாத காலம் காலமாக போட்டியில் வெற்றி பெற்ற வழக்கறிஞர் மற்றும் வழக்கறிஞர் உதவியாளர்ளுக்கு கேடயம் பரிசு மற்றும் நற்சான்றிதழ் வழங்கினார்கள்

இந்நிகழ்வில் ஏனைய நீதிபதிகள் செங்கல்பட்டு மாவட்ட வழக்கறிஞர் சங்கத் தலைவர் மகேஷ் குமார் செயலாளர் செல்வ குமார் மற்றும் வழக் கறிஞர்கள் , வழக்கறிஞர் உதவியாளர்கள் என ஏராளமான கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்

# ஓசூர் மாநகராட்சியில் 79-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு எம்.எல்.ஏ. மரியாதை



ஓசூர், ஆக. 17

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மாநகராட்சியில் மகாத்மா காந்தி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, மூவர்ணக் கொடியேற்றி மாநகராட்சி மேயர் எஸ்.எ.சத்யா அவர்கள் கொடியேற்றி வைத்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சிக்கு துணை மேயர் சி.ஆனந்தய்யா மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மாதேஸ்வரன், வெங்கடேஷ், ரவி, இந்திராணி, தேவி மாதேஷ், மம்தா சந்தோஷ், பார்வதி நாகராஜ், ஸ்ரீனிவாசுலு சென்னீரப்பா, மற்றும் சில மாமன்ற உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர். பள்ளி மாணவ மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது மற்றும் இந்த ஆண்டு சிறப்பாக பணிபுரிந்த அரசு ஊழியர்களுக்கு விருது சான்றிதழ் வழங்கப்பட்டது மற்றும் இந்த நிகழ்வில் பொதுமக்கள் என பலர் கலந்துக்கொண்டனர்.

# கோ.புதூர் அல் அமீன் மேல்நிலைப்பள்ளி 79வது சுதந்திர தின விழா நிகழ்வு



மதுரை, ஆக. 16

மதுரை கோ.புதூர் அல் அமீன் மேல்நிலைப்பள்ளி 79வது சுதந்திரதினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவிற்கு பள்ளித் தாளாளர் முகமது இதிரிஸ் தலைமை தாங்கினார். தலைமையாசிரியர் ஷேக் நபி முன்னிலை வகித்தார். தமிழாசிரியர் தௌபிக் ராஜா வரவேற்புரையாற்றினார். எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜே.சி.கணேசன் தேசியக்கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். மதுரை நகர் அரிமா சங்கத் தலைவர் ராமச்சந்திரன், செயலாளர் மாரியப்பன், பொருளாளர் அபுதாகீர், மதுரை மாவட்ட தமிழியக்க செயலாளர் பழனிச்சாமி, கல்வி புரவலர் ஆதித்தா, பேராசிரியை சப்ரா பீபி அல் அமீன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். ஃபெவிக்கால் மண்டல மேலாளர் உலகநாதன், வட்டார அலுவலர் முத்துக்குமார் மற்றும் ஃபெவிக்கால் சாம்பியன்ஸ் கிளப் நிர்வாகிகள் மரக்கன்று நட்டு நிகழ்வை சிறப்பித்தனர். சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களுக்கு சுதந்திரதினத்தின் சிறப்புகளை எடுத்துக்கூறி, தேசப்பற்று மிக்கவர்களாக ஒற்றுமை உணர்வோடு வாழ வேண்டும் என்று வலியுறுத்தினர். பள்ளி மாணவர்கள் சுதந்திரதின உரையாற்றினார். உதவித்தலைமையாசிரியர் ஜாகிர் உசேன் நன்றியுரையாற்றினார்.

நிகழ்ச்சியினை தமிழாசிரியர் நூருல்லாஹ் தொகுத்து வழங்கினார். விழா ஏற்பாடுகளை ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் செய்திருந்தனர். இவ்விழாவிற்கு ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் புதூர் வாழ் பொதுமக்கள் திரளாக வந்து கலந்துகொண்டனர்.

# தொப்பம்பட்டி ஒன்றியம் கள்ளிமந்தையம் ஊராட்சியில் 79-வது சுதந்திர தினவிழா கிராமசபை கூட்டம்



ஒட்டன்சத்திரம் ஆக. 17

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஒன்றியத்திற்கு உட்பட்ட கள்ளிமந்தையம் ஊராட்சியில் 79வது சுதந்திர தினவிழாவை முன்னிட்டு கிராமசபை கூட்டம் ஊராட்சி செயலர் நல்லதம்பி தலைமையில் நடைபெற்றது.

கூட்டம் நடைபெறுவதற்கு முன்பு தேசிய கொடியை ஏற்றிவைத்து கலந்துகொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

கூட்டத்தில் குடிநீர். சுகாதாரம், கலைஞர் கனவு இல்லம், பட்டா மின்சாரம் மற்றும் பல்வேறு கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக தொப்பம்பட்டி ஒன்றிய முன்னால் துணை பெருந் தலைவரும் கிழக்கு தி.மு.க ஒன்றிய கழக செயலாளருமான பி.சி.தங்கம் கலந்துகொண்டார்.

இதில் அரசு மருத்துவர் கோகுல் கலந்து கொண்டு மருத்துவத்துறை சார்பாக அரசு மக்களுக்கு செய்துகொண்டிருக்கின்ற சிறப்பான மருத்துவ சிகிச்சை குறிப்புகளை விரிவாக எடுத்துரைத்தார் குறிப்பாக கர்ப்பிணி பெண்களுக்கு வழங்குகின்ற சிகிச்சைகளைப் பற்றியும் அரசு வழங்குகின்ற உதவித்தொகையை எந்தெந்த காலகட்டத்தில் பெற முடியும் அதற்கு தாய்மார்கள் தெரிந்து கொள்ள வேண்டிய நடைமுறைகளை எடுத்துரைத்தார்.

மேலும் இதில் கலந்து கொண்ட மின்வாரிய பொறியாளர் பிரதிபா மின் வாரியத்தின் மூலம் பொதுமக்களும் விவசாயிகளும் பயன்பெறும் வகையில் அரசு வழங்குகின்ற சிறப்பான திட்டங்களை பற்றி பேசினார். இக்கூட்டத்தில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், வார்டு உறுப்பினர்கள், மருத்துவ செவிலியர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் பொதுமக்கள் கலந்துகொண்டனர். கிராமசபை கூட்டம் நிறைவடைந்த பின் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

# உத்தமபாளையம் அருகே நாகையகவுண்டன்பட்டியில் சிறப்பு கிராம சபை கூட்டம்: பொதுமக்கள் பங்கேற்பு




கம்பம், ஆக. 17

தேனி மாவட்டம் உத்தமபாளையம் அருகே உள்ள நாகையகவுண்டன்பட்டி ஊராட்சி கிராம சேவை மைய கட்டிடத்தில் தனி அலுவலர் பாண்டி மீனா தலைமையில் 79 வது சுதந்திர தின சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

இதில் விவசாயத்துறை, வருவாய் துறையினர், அங்கன்வாடி, நூறு நாள் வேலை திட்ட பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள், பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் கிராம மேம்பாடு குறித்த பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இறுதியாக ஊராட்சி செயலர் குமார் நன்றி கூறினார்.

# மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் மதுரை விஷால் டி மால் ஷோரூமில் கலைநயமிக்க நகைககளின் கண்காட்சி மற்றும் விற்பனை துவக்கம்




மதுரை, ஆக. 17

மதுரை.ஆகஸ்ட்.2025. கலைநயமிக்க நகைகளின் கண்காட்சி தற்போது மலபார்கோல்டு - டைமண்ட்ஸ் மதுரை விஷால் டி மால் ஷோரூமில் நடைபெற்று வருகிறது. தலைசிறந்த நகை வடிவமைப்பாளர்களால் சிறப்பாக வடிவமைக்கப் பட்டுள்ள இந்த நகைகள் ஒவ்வொன்றும் அந்த கலைஞர்களின் நிபுணத்துவத்தையும் தனிப்பட்ட திறன்களையும், அனைத்து நகைகளிலும் ஒரு கலைநயம் இருக்கிறது என்பதை நிருபிக்கும் வகையிலும் உள்ளன.

இந்த கண்காட்சியை சுந்தர பாண்டியன், டாக்டர்.விசாலினி, டாக்டர்.ரவிச்சந்திரன், ஜெயலட்சுமி, தீபக் பிரசாந்த், ஸ்ரீசாராதேவி, ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் சுதிர் முகமது (மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் தமிழ்நாடு கிழக்கு மண்டல தலைவர்) நிஷாந்த் (மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் மதுரை விஷால் டி மால் கிளை தலைவர்), சிஹாபுதீன் (மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் மதுரை மேல மாசி வீதி கிளை தலைவர்),மற்றும் கிளை ஊழியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

கலைநயமிக்க இந்த கண்காட்சி ஆகஸ்ட் 15 2025. முதல் ஆகஸ்ட் 24 2025. வரை நடைபெறும். இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ள நகைகளை வாடிக்கையாளர்கள் சிறப்பு விலையில் வாங்கலாம். மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் விற்பனையகத்தில் கலைநயமிக்க அணிகலன்கள் கிடைப்பது சிறப்பம்சமாகும். அணிந்தாலே ஜொலிக்கும் வைர நகைகளானமைன் பிரம்மாண்டமான வடிவமைப்புகளை கொண்டுள்ள வெட்டாத வைரத்தால் செய்யப்பட்ட எரா மிகவும் பொக்கிஷமாக கருதப்படும் விலை உயர்ந்தகற்களால் செய்யப்பட்ட நகை தொகுப்பான பிரீசியா நகைகள், கைவினை கலைஞர்களால் கையால் செய்யப்பட்ட நகைகளின் தொகுப்பான எத்தினிக் நமது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பாரம்பரிய இந்திய நகை வடிமைப்புகளில் உருவான டிவைன் குழந்தைகளுக்கான நகை தொகுப்பான ஸ்டார்லெட் ஆகியவை இந்தகண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோயில், சேலம், திருச்சி, ஈரோடு, வேலூர், இராமநாதபுரம், ஈரோடு, தருமபுரி, தஞ்சாவூர், கும்பகோணம், திருப்பூர், காரைக்குடி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, மார்த்தாண்டம், புதுச்சேரி, கரூர், செங்கல்பட்டு, கடலூர், ஓசூர், ஆகிய நகரங்களில் 32 கிளைகளை கொண்டுள்ளது. மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் நிறுவனம் பற்றி: நாட்டில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் வர்த்தக குழுமங்களில் ஒன்றான மலபார் குழும நிறுவனங்களின் முன்னணி பிரிவு தான் மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் நிறுவனம் ஆகும். இந்தியா, சிங்கப்பூர், வளைகுடா மற்றும் அமெரிக்க நாடுகளில் சில்லறை விற்பனை பிரிவில் உள்ள இந்த நிறுவனம் பிஐஎஸ் சான்று பெற்ற 916 தங்க நகைகளையும் ஐஜிஐ சான்று பெற்ற வைர நகைகளையும் பிஜிஐ சான்று பெற்ற பிளாட்டின நகைகளையும் வெள்ளி நகைகளையும் விற்பனை செய்கிறது.

அனைத்து நகைகளும் வெளிப்படையான விலை, நிகர எடை, கற்களின் எடை, சேதாரம், கற்களுக்கான விலை, அதன் நிகர எடை ஆகிய வற்றை தெளிவாக குறிப்பிடும் பட்டியலுடன் வைக்கப் பட்டுள்ளன. இதனால் வாடிக்கையாளர்கள் ஒவ்வொரு நகையின் தயாரிப்பு குறித்தும் விலையையும் எளிதாக புரிந்து கொண்டு வாங்குவதற்கு திட்டமிடலாம். வாடிக்கையாளர்கள் வாங்கும் அனைத்து நகைகளுக்கும் ஆயுள் முழுவதும் இலவச பராமரிப்பு, அனைத்து நகைகளையும் எப்போது வேண்டுமானலும் திரும்ப பெற்றுக்கொள்ளும் உத்தரவாதம் உள்ளிட்ட10 வாக்குறுதிகளை நமது மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் நிறுவனம் வழங்குகிறது. இவை தவிர மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் நிறுவனத்தின் வெற்றிகரமான வணிகத்திற்கு அதன் சமூகபொறுப்பும் முக்கியகாரணமாக உள்ளது. தனது லாபத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி, சுற்றுச்சுழல் பாதுகாப்பு, மற்றும் மகளிரை அதிகாரமயமாக்குதல் என பல்வேறு சமூக பொறுப்பு திட்டங்களுக்கு செலவு செய்கிறது.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
17.8.2025

# வீனஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 79வது சுதந்திர தினவிழா கொண்டாட்டம்



சிதம்பரம், ஆக. 16

சிதம்பரம் வீனஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 79வது சுதந்திர தின விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாரியப்பன்., சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். விழாவின் தொடக்கமாக சிறப்பு விருந்தினர் மாரியப்பன் வீனஸ் குழுமப் பள்ளிகளின் நிறுவனர் வீனஸ். குமார் மற்றும் பள்ளியின் தாளாளர் ஏ. ரூபியால்ராணி, இனைந்து தேச தலைவர்களின் திருவுருவ படத்திற்கு வண்ண மலர்களை தூவி மரியாதை செலுத்தினார்கள்.

சிறப்பு விருந்தினர் அர்வகளுக்கு வீனஸ் குழுமப் பள்ளிகளின் நிறுவனர். வீனஸ். குமார், மெட்ரிக் பள்ளியின் முதல்வர. நரேந்திரன் மற்றும் நிர்வாக அலுவலர் ரூபிகிரேஸ் பொனிகலா மற்றும் பள்ளியின் சாரண, சாரணியர், தேசிய பசுமை படை, நீலமுறவையினர், தேசிய மாணவர் படை மற்றும் செஞ்சிலுவை சங்கம் மாணவிகள் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

தமிழ்த்தாய் வாழ்த்தை தொடர்ந்து சிறப்பு விருந்தினர் தேசியக் கொடியேற்றினார். பின்னர் கொடிப்பாடலைத் தொடர்ந்து அனைவரும் தேசப்பற்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து வீனஸ் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி கலையரங்கத்தில் நிகழ்ச்சிகள் தொடங்கின. பள்ளியின் முதல்வர். நரேந்திரன் வரவேற்புரையாற்றினார். பின்னர் சிறப்பு விருந்தினருக்கு பள்ளியின் நிறுவனர் பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்கியும் கவுரவித்தார். அடுத்ததாக சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி, சிறப்பு விருந்தினர் கவுரவித்தார். அதனைத் தொடர்ந்து மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் துவங்கின.

மாணவ, மாணவிகள் தங்களின் கண்கவர் கலைநிகழ்சிகள் மூலம் தேசப்பற்றையும், கல்வியின் அவசியத்தையும் எடுத்துரைத்து, விழிகளுக்கும், செவிகளுக்கும் விருந்து படைத்தனர்.



திருவாரூர் மாவட்டம், திருவாரூர் ஒன்றியம், கீழக்காவதுக்குடி ஊராட்சியில் 79வது சுதந்திர தினவிழாவை முன்னிட்டு நடைபெற்ற கிராமசபா கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் வ.மோகனச்சந்திரன் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட அலுவலர் பல்லவி வர்மா ஆகியோர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

# நாகூர் ஆண்டவர் தரிசித்த மஹான் நாகூர் கந்தூரி விழா



நாகை ஆக: 16

நாகூர் ஆண்டவர் தரிசித்த மஹான் நாகூர் ஹஜ்ரத் ஹாஜி ஹாதி நூர் ஷா ஒலியுல்லாஹ் ஷிஷ்தி (ரலி) அவர்களின் நினைவு உரூஸ் நாளில் நாகூர் நாயகம் நேசப்பாசறை அறக்கட்டளை சார்பில் நாகூர் ஆண்டவர் தர்காவில் பூஹலேபூ, சந்தனம், அத்தர், ஷிஷ்தியா தரீக்கத்தின் போர்வை மற்றும் பிரசாதம் (தப்ரூக்) ஆகிய அனைத்தும் நாகூர் ஆண்டவர் சன்னதி எதிரில் நடுமண்டபத்தில் தர்கா பரம்பரை டிரஸ்டி ஹாஜி காஜி ஷேக் ஹஸன் சாஹிப் காதிரி அவர்கள் தலைமையில்

துஆ ஓதி ஃபக்கீர்மார்கள் பைத்துடன் புறப்பட்டு நாகூர் நூர்ஷா ஹாஜி தைக்காலுக்கு சென்று ஹஜ்ரத் ஹாஜி ஹாதி நூர் ஷா ஒலியுல்லாஹ் (ரலி) அவர்களின் மஜார் ஷரீஃபில் புனித போர்வை அணிவித்து பூஹலேபூ போட்டு தர்கா பரம்பரை டிரஸ்டி அபுல் ஃபதஹ் சாஹிப் காதிரி அவர்கள் துஆ ஓதினார்கள்,

இந்நிகழ்ச்சியில் மேலை நாகூர் தர்கா பரம்பரை டிரஸ்டி - கலீஃபா கல்தான் கபீர் சாஹிப் காதிரி, தர்கா பங்குதாரர் ஹாஜி அபூபக்கர் சாஹிப் அவர்கள், சாஹா மாலிம், தம்பி சாஹிப், சாபுனி சாஹிப், கௌது, ஹஸன், அன்வர், ராஜா மற்றும் பலர் கலந்துக்கொண்டனர், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் நாகூர் ஹஜ்ரத் ஹாதி ஹாஜி நூர் ஷா ஒலியுல்லாஹ் (ரலி) அவர்களின் பாரம்பரிய வம்சா வழியினர் நாகூர் நாயகம் நேசப்பாசறை அறக்கட்டளை நிறுவனத்தலைவர் - மேனேஜிங் டிரஸ்டி டாக்டர் ஹாஜா சம்சுதீன் சாஹிப் காதிரி அவர்கள், நிகழ்ச்சி அமைப்பாளர் முஹம்மது ஹுசைன் சாஹிப் அவர்கள், ஜாதி, மத, பேதமின்றி கலந்துக் கொண்ட அனைத்து மக்களுக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

# இன்றைய ராசி பலன்கள் (17.8.2025)

**மேஷம்:** சிந்தனைகளில் தெளிவு வரும்நாள். புதியமுயற்சிகள் முன்னேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.

**ரிஷபம்:** இன்றைய முயற்சிகள் பலன் தரும். நிதி தொடர்பான கவலைகள் குறையும். உறவினர்களுடன் மகிழ்ச்சி.

**மிதுனம்:** சிறிய தடைகள் இருந்தாலும், தன்னம்பிக்கையால் சமாளிப்பீர்கள். தொழிலில் முன்னேற்றம்.

**கடகம்:** குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். நண்பர்களின் உதவி கிடைக்கும். பணவரவு கூடும்.

**சிம்மம்:** திட்டமிட்ட வேலைகள் நிறைவேறும். உங்களது முயற்சிகள் பாராட்டப்படும். உடல்நலம் சீராகும்.

**கன்னி:** பணியிடத்தில் முன்னேற்றம் உண்டு. வீட்டு விஷயங்களில் நிம்மதி காண்பீர்கள். தூரப் பயணம் வாய்ப்பு.

**துலாம்:** முன்னேற்றத்திற்கு சாதகமான நாள். நிதி நிலை மேம்படும். நல்ல தகவல்கள் வரும்.

**விருச்சிகம்:** சிறு சிக்கல்கள் இருந்தாலும், சாதகமான முடிவு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி..


**தனுசு:** புதிய வாய்ப்புகள் வந்து சேரும். வியாபாரத்தில் முன்னேற்றம். நண்பர்களுடன்சந்தோஷநேரம்.

**மகரம்:** அமைதியாக செயல்பட வேண்டிய நாள். குடும்பத்தில் அன்பு அதிகரிக்கும். நிதி செலவில் கவனம் அவசியம்.

**கும்பம்:** திடீர் சந்திப்புகள் நல்ல பலன் தரும். தொழில் வளர்ச்சி. உடல் நலம் நல்லபடி இருக்கும்.

**மீனம்:** இன்றையஉழைப்புக்குபாராட்டு கிடைக்கும். நண்பர்களிடம் உதவி கிடைக்கும். மனநிம்மதி அதிகரிக்கும்.

# தாராபுரம் சென்ட்வின் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் சுதந்திர தின விழா




தாராபுரம் ஆக. 18

தாராபுரத்தில் உள்ள சென்ட்வின் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நம் நாட்டின் சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நமது இந்திய திருநாட்டின் 79 ஆவது சுதந்திர தின விழாவை திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் உள்ள சென்ட்வின் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சியின் ஆரம்பமாக நமது இந்திய தேசிய கொடியை அப்பள்ளியின் தாளாளர் பிரணு விசாகன் ஏற்றி வைத்தார். அதைத் தொடர்ந்து மாணவிகள் பேச்சுப்போட்டியில் கலந்து கொண்டு இந்திய சுதந்திர போராட்ட வீரர்களை நினைவு கூறும் வகையில் பேசினர். மாணவிகளின் கண் கவர் நடனம் அங்கு வந்திருந்தவர்களை ரசிக்க வைத்தது. சுதேசி கப்பல் உருவாக்கப்பட்டதன் காரணத்தை மாணவர்கள் பாரதியார் மற்றும் கப்பலோட்டிய தமிழன் வ உ சிதம்பரனார் ஆகியோர்களின் வேடமேற்று தத்ரூபமாக நடித்துக் காட்டிய விதம், இந் நிகழ்ச்சிக்கு பெருமை சேர்ப்பதாக அமைந்தது. மேலும் இந்நிகழ்வில் பேச்சுப்போட்டி, கவிதை போட்டி, கட்டுரை போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பள்ளியின் சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டன. பின்னர் தேசிய கீதம் பாடப்பட்டு விழா இனிதே நிறைவு பெற்றது. இந்த விழாவை அப்பள்ளியின் முதல்வர் சித்திரை குமார் மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# பாலா நடிக்கும் காந்தி கண்ணாடி பட ரிலீஸ் தேதி அறிவிப்பு




சின்னத்திரையில், ரியாலிட்டி ஷோக்களில் அசத்தி வரும் கே.பி.ஒய் பாலா, திரைப்படங்களில் நடித்து வரும் நிலையில், தனது சம்பளத்தில் பாதியை மக்களுக்கு உதவி செய்து வருகிறார். அதேபோல் திரைப்படம் மற்றும் ஆல்பம் பாடல்களில் கவனம் செலுத்தி வரும் அவர், நடிப்பில் தீவிரம் காட்டி வருகிறார்.சின்னத்திரையில் விஜய் டிவியின் கலக்கப்போவது யாரு நிகழ்ச்சியின் மூலம் புகழ் பெற்றவர் கே.பி.ஒய்.பாலா. தனது காமெடியான ஒன்லைனர் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமான இவர், ஒரு சில திரைப்படங்களிலும் நடித்துள்ளார். சின்னத்திரை வெள்ளித்திரையில் நடித்து வந்தாலும், பாலா சமூக சேவையில் தன்னை ஈடுபடுத்திக்கொள்வது பலரின் கவனத்தை ஈர்த்தது.

மலை கிராம மக்களுக்கு உதவும் வகையில் ஆம்புலன்ஸ் வாங்கி கொடுத்த பாலா, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பிரபல நடிகருக்கு தன்னால் முடிந்த உதவியை செய்து வருகிறார். திரைப்படங்களில் நடிப்பது, நிகழ்ச்சிகள் தொகுத்து வழங்குவது என பிஸியாக இருக்கும் கே.பி.ஒய் பாலா ஒரு ஆல்பம் பாடலில் நடித்துள்ளார். பிரபல நடிகரான ராகவா லாரன்ஸ் போன்றோருடன் இணைந்து தனது தொண்டுகளை விரிவுப்படுத்தியுள்ளார்.

இயக்குநர் ஷெரீப்பின் புதியப் படத்தின் மூலம் பாலா கதாநாயகனாக அறிமுகமாகிறார். நடிகர் வைபவ்வின் 25வது படமாக 'ரணம் அறம் தவறேல்' எனும் திரைப்படத்தை ஷெரீப் இயக்கியுள்ளார். இந்தப் படத்தில் நடிகை நமிதா கிருஷ்ணமூர்த்தி முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கிறார்.

இந்த நிலையில் ‘காந்தி கண்ணாடி’ படத்தின் தமிழ்நாட்டு திரையரங்க வெளியீட்டு உரிமையை பிரபல நிறுவனம் கைப்பற்றியுள்ளது. சின்னத்திரை நடிகர் பாலா நடித்துள்ள‘காந்தி கண்ணாடி’ படத்தின் வெளியீட்டு உரிமையை பிரபல நிறுவனமான சக்தி பிலிம்ஸ் பேக்டரி கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

‘காந்தி கண்ணாடி’ படம் வரும் செப்டம்பர் 5ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

# 74 வயதிலும் அசத்தும் ரஜினிகாந்த்.. வைரலாகும் வீடியோ



தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரமான ரஜினிகாந்த் நடிப்பில் சமீபத்தில் வெளியான படம் கூலி. லோகேஷ் கனகராஜ் இயக்கிய இந்த படம் உலகம் முழுவதும் திரைக்கு வந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டு இருக்கிறது. இப்படம் முதல் நாளில் மட்டும் ரூ.151 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளது.

கூலி படத்தினை தொடர்ந்து, தற்போது ரஜினிகாந்த் நெல்சன் இயக்கத்தில் ‘ஜெயிலர்2’ படத்தில் நடித்துக் கொண்டு இருக்கிறார். மேலும், புதிய படத்துக்கான கதைகளையும் கேட்டு வருவதாக கூறப்படுகிறது.

இதற்கிடையில், ரஜினிகாந்த் உடற்பயிற்சி மற்றும் யோகாசனத்தில் தீவிர ஆர்வம் காட்டி வருகிறார். தனது பட விழாக்களில் கூட அதை வலியுறுத்தி வருகிறார். சமீபத்தில் ஒரு விழாவில் கூட, ‘‘உடலை நாம் தண்டிக்காவிட்டால் ஒரு கட்டத்தில் உடல் நம்மை தண்டிக்க தொடங்கும். எனவே உடற்பயிற்சி செய்யுங்கள’’ என்று அவர் பேசியிருந்தார்.

இந்த நிலையில், ரஜினிகாந்த் உடற்பயிற்சி செய்யும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகி வருகிறது. புத்துணர்ச்சி குறையாமல் அவர் உடற்பயிற்சி செய்வது ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. ‘74 வயதிலும் தலைவர் அசத்துகிறாரே...’, என்று ரசிகர்கள் பாராட்டி பேசி வருகிறார்கள்.

# நயன்தாராவின் “டியர் ஸ்டூடெண்ட்ஸ்” டீசர் வெளியீடு



கடந்த 2019ம் ஆண்டு வெளியான படம் 'லவ் ஆக்சன் ட்ராமா'. இந்தப் படத்தில் நிவின் பாலி, நயன்தாரா ஆகியோர் முன்னணி கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். இந்நிலையில் இவர்கள் இருவரும் மீண்டும் புதிய படம் ஒன்றுக்காக இணைந்துள்ளனர். சந்தீப் குமார், ஜார்ஜ் பிலிப் ராய் ஆகியோர் இணைந்து இப்படத்தைஇயக்குகின்றனர்.நிவின்பாலிஇப்படத்தைதயாரிக்கிறார்.இப்படத்தில் நயன்தாரா இணைந்துள்ளதை வீடியோ வெளியிட்டு படக்குழு தெரிவித்துள்ளது. படப்பிடிப்பு நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘டியர் ஸ்டுடெண்ட்ஸ்’ படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி வைரலானது. இப்படம் பள்ளிக்கூடத்தில் நடக்கும் கதையை அடிப்படையாக வைத்து உருவாகியுள்ளதாக தெரிகிறது. முன்பு 'பிரேமம்' கல்லூரி காதல் கதையை அடிப்படையாக கொண்டு நிவின் பாலி சாய் பல்லவி நடிப்பில் உருவானது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் நிவின் பாலி, நயன்தாரா நடிப்பில் உருவாகி வரும் ‘டியர் ஸ்டுடெண்ட்ஸ்’ படத்தின் டீசர் இன்று மாலை 5 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்தது. அதன்படி, தற்போது ‘டியர் ஸ்டூடெண்ட்ஸ்’ படத்தின் டீசர் வெளியாகி உள்ளது.

# விராட், ரோகித் தொடர்ந்து விளையாட வேண்டும்.. ஏனெனில் சுப்மன் கில்லுக்கு.. இந்திய முன்னாள் வீரர்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி நட்சத்திர வீரர்களான ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி இருவரும் கடந்த டி20 உலகக்கோப்பை தொடரை வென்ற பின்னர் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் ஓய்வு பெறுவதாக அறிவித்தனர். இந்நிலையில், யாரும் எதிர்பார்க்காத வண்ணம் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக இருவரும் சமீபத்தில் அறிவித்தனர்.

இந்த முடிவு அவர்களது ரசிகர்களுக்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த கிரிக்கெட் உலகத்தையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர்களை தேர்வு செய்ய பி.சி.சி.ஐ. தேர்வுக்குழு விரும்பவில்லை என்று தகவல்கள் வெளியான நிலையில் இருவரும் அடுத்தடுத்து ஓய்வு முடிவை அறிவித்து அதிர்ச்சி அளித்தனர். இதனையடுத்து ஒருநாள் போட்டிகளில் மட்டுமே தொடர்ந்து விளையாட உள்ள அவர்கள் அடுத்த உலகக்கோப்பை (2027) வரை விளையாடுவதை இலக்காக கொண்டுள்ளனர். இருப்பினும் அவர்களால் ஒருநாள் உலகக்கோப்பை வரை தொடர்ந்து பார்மில் இருக்க முடியுமா? என்பது சந்தேகம்தான். அந்த உலகக்கோப்பை தொடருக்கு முன்னதாக இந்திய அணி ஏறக்குறைய 27 ஒருநாள் போட்டிகளில் மட்டுமே விளையாட உள்ளது. அந்த போட்டிகளில் இருவரும் தொடர்ந்து அசத்தினால் மட்டுமே உலகக்கோப்பை வரை இந்திய அணியில் இடம்பெறுவார்கள் என்று கூறப்படுகிறது. இதனால் அவர்கள் உலகக் கோப்பை போட்டிக்கான அணியில் இடம் பிடிப்பது கடினம் என பல முன்னாள் வீரர்கள் கூறியுள்ளனர். இதனிடையே ரோகித் சர்மாவுக்கு பதிலாக சுப்மன் கில் ஒரு நாள் போட்டி அணிக்கும் கேப்டனாக நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகின. இந்நிலையில் ஒருநாள் கிரிக்கெட்டில் விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா தொடர்ந்து விளையாட வேண்டும் என்று இந்திய முன்னாள் வீரரான சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார். இதற்கான காரணம் குறித்து அவர் கூறுகையில், “ரோகித் சர்மா, விராட் கோலியின் அனுபவம் மிகவும் முக்கியமானது. சீனியர்களான அவர்கள் இருவரும் ஜூனியர் வீரர்களுக்கு வழிகாட்டியாக அவர்களுடன் இணைந்து தொடர்ந்து விளையாட வேண்டியது அவசியம். சுப்மன் கில் உண்மையிலேயே நன்றாக செயல்படுகிறார். ஆனால் அவருக்கு ரோகித், கோலி போன்ற அனுபவ வீரர்கள் தேவை. அவர்கள் இருவரும் ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி, டி20 உலகக்கோப்பையை வென்று இருக்கிறார்கள். விராட் கடந்த ஐ.பி.எல். கோப்பையை வென்றார். அத்துடன் தங்களது கிரிக்கெட் வாழ்க்கையில் கேப்டன்ஷிப்பிலும் அசத்திய அவர்கள் இந்த இளம் இந்திய அணியின் ஓய்வறையில் ஒரு பகுதியாக இருக்க வேண்டியது அவசியம்” என்று கூறினார்.

அத்துடன் சமீப காலமாக சிறப்பாக செயல்பட்டு வரும் முகமது சிராஜ் 3 வடிவிலான போட்டிகளிலும் விளையாடும் வாய்ப்பை பெற வேண்டும் என்று சுரேஷ் ரெய்னா ஆதரவு தெரிவித்துள்ளார்.

# சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ்: சேலஞ்சர்ஸ் பிரிவில் தமிழக வீரர் பிரனேஷ் சாம்பியன்




3வது சென்னை கிராண்ட்மாஸ்டர்ஸ் செஸ் போட்டி சென்னை தேனாம்பேட்டையில் கடந்த 7ம் தேதி தொடங்கியது. 9 சுற்றுகள் கொண்ட இந்த போட்டியில் மாஸ்டர்ஸ், சேலஞ்சர்ஸ் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு வீரர்கள் தங்களுக்குள் தலா ஒரு முறை மோதினர். மாஸ்டர்ஸ் பிரிவில் நேற்று 9வது மற்றும் கடைசி சுற்று ஆட்டங்கள் நடந்தன. முந்தைய சுற்றின் போதே பட்டத்தை உறுதி செய்து விட்ட ஜெர்மனி கிராண்ட்மாஸ்டர் வின்செண்ட் கீமர் தனது கடைசி சுற்றில் அமெரிக்காவின் ராய் ராப்சனை எதிர்கொண்டார். கருப்பு நிற காய்களுடன் ஆடிய கீமர் 41வது நகர்த்தலில் எதிராளியை மடக்கினார்.

இந்திய வீரர்கள் அர்ஜூன் எரிகைசி கார்த்திகேயன் முரளி இடையிலான ஆட்டம் 49வது நகர்த்தலில் ‘டிரா’ ஆனது. 9வது மற்றும் கடைசி சுற்று முடிவில் வின்செண்ட் கீமர் 7 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்து சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார்.

அவருக்கு ரூ.25 லட்சம் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டது. அனிஷ் கிரி 2வது இடத்தையும் (5 புள்ளி), அர்ஜூன் எரிகைசி 3வது இடத்தையும் (5 புள்ளி) பிடித்தனர். அனிஷ், எரிகைசி இருவரும் ஒரே புள்ளிகளை பெற்றிருந்ததால் அவர்களுக்கு தலா ரூ.10¾ லட்சம் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டது. முழுமையாக இந்திய வீரர், வீராங்கனைகள் மட்டுமே கலந்து கொண்ட சேலஞ்சர்ஸ் பிரிவில் தமிழக வீரர் பிரனேஷ் சாம்பியன் பட்டம் வென்றார். இதில் நேற்று நடந்த கடைசி சுற்றின் ஒரு ஆட்டத்தில் இந்திய கிராண்ட்மாஸ்டர் பிரனேஷ், ஹர்ஷவர்தனுடன் மோதினார். 6½ புள்ளிகளுடன் களமிறங்கிய பிரனேஷ் 46வது காய் நகர்த்தலில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். இதனால் அபிமன்யு புரானிக், லியோன் லுக் மென்டோன்கா ஆகியோருக்கு பட்டம் வெல்வதற்கான வாய்ப்பு உருவானது. ஆனால் அதை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள தவறினர். மென்டோன்கா மற்றும் அபிமன்யு புரானிக் தங்களது கடைசி ஆட்டங்களில் தோல்வியை தழுவினர். இறுதிசுற்று முடிவில் தமிழக வீரரான பிரனேஷ் 6½ புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்து சாம்பியன் பட்டத்தை தனதாக்கினார்.

அவருக்கு ரூ.7 லட்சம் பரிசாக கிடைத்தது. சேலஞ்சர்ஸ் பிரிவில் பட்டம் வென்றதன் மூலம் அடுத்த ஆண்டு நடக்கும் சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் தொடரில் நேரடியாக மாஸ்டர்ஸ் பிரிவில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளார்.அதிபன்6புள்ளிகளுடன்2வதுஇடத்தையும், அபிமன்யு புரானிக் 6 புள்ளிகளுடன் 3வது இடத்தையும் பிடித்தனர்

DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd S
T R E E T ,